பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் நாமக்கல் கவிஞர் மாளிகை

# இடம் பொருள் கலைஞர் 47



# நாமக்கல் கவிஞர் மாளிகை

## கவியின் தியாகம் போற்றும் அரசின் கம்பீரம்!

தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஒரு காலத்தில் மேலவை என்ற ஒன்று இருந்தது. அதில் நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை உறுப்பினராக இருந்தார். அவரது பதவிக் காலம் முடிந்த பிறகு, அவருடைய பொருளாதார நிலைமையை விளக்கி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்த சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது.

அந்தக் கடிதம் கிடைக்கப் பெற்றவுடன், கலைஞர் உடனே அவருக்கு வாழ்நாள் முழுவதும் மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் உதவித் தொகை தமிழ்நாடு அரசின் சார்பில் அளிக்கப்படும் என்றும், அந்த ஆணை 1967-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து கணக்கிடப்பட்டு, நடைமுறைக்கு வரும் என்றும் அறிவித்தார். கலைஞர் செய்த அந்த உதவிக்கு நன்றி தெரிவித்து கவிஞர் ஒரு கடிதம் எழுதினார் இப்படி:

“மெய்யன்பரே, அன்பு ததும்பும் தங்களுடைய கடிதம் வந்தது. அறிக்கையைத் தாங்கள் வெளியிட்ட அன்று மாலையிலேயே அது ரேடியோவில் சொல்லப்பட்டதைக் கேட்ட பல நண்பர்கள் என் வீட்டிற்கு ஓடி வந்து தங்களையும், என்னையும் வானளாவப் புகழ்ந்து பாராட்டினார்கள். நான் பூரித்துப் புளகாங்கிதம் அடைந்தேன்.

தங்கள் அன்பே அன்பு. பெயர் அளவில் மட்டுமல்ல; தாங்கள் செயலிலும் கருணையின் நிதியே! தாங்கள் முதலமைச்சரானது முதல் கருணை மிக்கக் காரியங்களையே செய்திருக்கிறீர்கள். தங்களுடைய ஆட்சிக் காலம் சரித்திரத்தில் பொற்காலமாக விளங்கும். நான் அதைக் கவிதையில் பாடுவேன். தாங்கள் அண்ணா அவர்களின் மேலான குறிக்கோள்களைச் செயலாக்கி வருவதை மனமார வாழ்த்துகிறேன். நீடூழி வாழ்க!”.

‘கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது’ என்று பாடிய அந்த கவிஞர், தி.மு.க.காரர் அல்ல. காங்கிரஸ்காரர். என்றாலும், அவரது படைப்புகள், போராட்டங்கள் ஆகியவற்றைப் போற்றியவர் என்ற முறையில், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவருக்கு, அவர் கேட்ட உடனே உதவி செய்தார் கலைஞர்.



வேறு எந்தத் தலைவராக இருந்தாலும், ‘நீங்கள் கேட்டீர்... நான் செய்தேன்...’ என்று உதவித் தொகை அளித்ததோடு சென்றிருப்பார்கள். ஆனால், கலைஞர் எப்போதும் அரசியல் நாகரிகம் பாராட்டியவர். கட்சி வித்தியாசம் பாராமல் தியாகிகளை வணங்கியவர். அதனால்தான் யாரும் கேட்காமலேயே பழைய ஜார்ஜ் கோட்டைக்குப் பக்கத்தில் பத்து மாடிக் கட்டடம் எழுப்பி, அதற்கு ‘நாமக்கல் கவிஞர் மாளிகை’ என்று பெயர் சூட்டினார். அடிக்கல் நாட்டுவது தொடங்கி, பெயர் சூட்டியது வரை, அனைத்துமே கலைஞர் ஆட்சியில் நடந்தன என்பதுதான் இங்கு கவனிக்கத்தக்கது. அந்தக் கட்டடத்தில்தான் இன்று தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகம் இயங்குகிறது!

### இடநெருக்கடியால் முளைத்த மாளிகை

புனித ஜார்ஜ் கோட்டை தலைமைச் செயலகம் இடநெருக்கடி காரணமாக புதிதாக தலைமைச் செயலகக் கட்டடம் கட்டப்பட்ட வேண்டும் என்று கருத்து அனைத்துக் கட்சியினரிடையேயும், அரசு அலுவலர்கள் மத்தியிலும் நிலவி வந்தது.

அதன் பொருட்டு, 1971-ஆம் ஆண்டில் 1.35 கோடி ரூபாய் ஒதுக்கி, பத்து மாடிக் கட்டடம் கட்ட முத்தமிழறிஞர் கலைஞர் உத்தரவிட்டார். இன்று அந்தக் கட்டடம் இருக்கும் இடத்தில், அதற்கு முன்பு அண்ணா அரங்கம் இருந்தது. இடப் பற்றாக்குறை ஏற்பட்டபோது, அந்த இடம் ராணுவத்திடமிருந்து பெறப்பட்டது.

“கட்டுமானப் பணிகள் தொடங்கியதிலிருந்து முடியும் வரை, தலைமைச் செயலகம் வரும் முதல்வர், வார விடுமுறை நாட்களில் மேற்பார்வை யிடுவதை வழக்கமாக வைத்திருந்தார். கட்டுமானப் பொறியாளர்களிடம் ஆலோசனைகள் சொல்வார்.

மிகவும் திட்டமிட்டுக் கட்டப்பட்ட அந்தப் பத்து மாடிக் கட்டடத்தின் ஒவ்வொரு தளத்திலும் துறைச் செயலாளர், அலுவலர்களுக்கான அறைகளோடு பணியாளர்களுக்கான உணவறை, கழிப்பறை வசதிகளும் உள்ளடங்கியிருந்தன. பத்தாவது தளத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்துவதற்கு ஏற்றவாறு கலந்துரையாடல் அரங்கமும் அமைக்கப்பட்டது.

தலைமைச் செயலகப் பணியாளர்களால் உற்சாகத்துடன் எதிர்பார்க்கப்பட்டிருந்த திறப்பு விழா நாளும் வந்தது. ஆனால், எதிர்பார்ப்புதான் நிறைவேறவில்லை. அப்போதைய அரசியல் சூழ்நிலையால் ஒருநாள் காலை நேரத்தில் எளிய நிகழ்ச்சியாகத் திறப்பு விழா நடந்தது ஏமாற்றம்தான். எனினும், கலைஞர் பார்த்துப் பார்த்துக் கட்டிய நாமக்கல் கவிஞர் மாளிகை என்றென்றும் கலைஞரின் பெயரைச் சொல்லிக்கொண்டிருக்கும்” என்று ஓய்வுபெற்ற தலைமைச் செயலகப் பணியாளர் சொ.கந்தசாமி என்பவர் நாளிதழ் ஒன்றுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

1975 ஆகஸ்ட் 14 ஆம் தேதி அந்தக் கட்டடம் திறக்கப்பட்டு, அன்று முதல் அங்குத் தலைமைச் செயலகம் இயங்கி வரத் தொடங்கியது.

### கட்சிக்கு அப்பால் கௌரவம்

காங்கிரஸ்காரராக இருந்தாலும், நாமக்கல் கவிஞரின் நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட ‘மலைக்கள்ளன்’ படத்துக்கு, வசனம் தீட்டியவர் கலைஞர். அவருக்கு உதவித் தொகை அளித்ததோடு நின்றுவிடவில்லை. 1989-ஆம் ஆண்டு அக்டோபர் 19 அன்று, கவிஞரின் நூற்றாண்டைப் போற்றும் வகையில், அவரின் நினைவாக அஞ்சல் தலையை வெளியிட்டார் கலைஞர். அந்த விழாவில்தான் இந்தக் கட்டடத்துக்கு ‘நாமக்கல் கவிஞர் மாளிகை’ என்ற பெயரையும் சூட்டினார்.

பிறகு, 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி 9 அன்று, சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் சிலை திறப்பு விழாவில், அந்தக் கட்டடத்துக்குக் கவிஞரின் பெயரைச் சூட்டியது ஏன் என்பதற்கான காரணத்தைத் தெரிவித்தார் கலைஞர்.

“நாமக்கல் கவிஞருடைய பெயரால், இப்படியொரு மாளிகை அமைக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கேன் ஏற்பட்டது என்றால், அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், எந்த இயக்கத்திற்கு அவர் தொண்டாற்றியவராக இருந்தாலும், எந்த இயக்கத்தின் தலைவர்களைப் போற்றிப் புகழ்ந்து பாடியவராக இருந்தாலும், எந்த அளவிற்குத் திராவிட இயக்கத்தை, தந்தை பெரியாரை, பேரறிஞர் அண்ணாவை எதிர்த்துக் கருத்துகளை வழங்கியவராக இருந்தாலுங்கூட, அவைகளை எல்லாம் மறந்து, ஒரு தமிழன், திறமையான ஒரு தமிழ்க் கவிஞன் என்ற முறையிலே அவரை நான் நேசித்தேன், அவருடைய திறமையைப் பூசித்தேன். அந்தக் காரணத்தினாலே தான், நாமக்கல்லார் பெயரால், ‘நாமக்கல் கவிஞர் மாளிகை’யை அங்கே எழுப்பினேன்”.

ஆட்சி வரும் போகும்தான். ஆனால் அதிகார மையங்கள் எனும் அரசு இயந்திரம், இடையறாது சுழன்று கொண்டே இருக்கும். நம் கழகம் ஆட்சியில் இருந்தபோதெல்லாம், அந்த இயந்திரம் எவ்வளவு தொலைநோக்குடனும் ஜனநாயகத் தன்மையுடனும் அர்ப்பணிப்பு உணர்வோடும் சுழன்றது என்பதற்குச் சாட்சியாக உயர்ந்து நிற்கிறது அந்த மாளிகை! ...வலம் வருவோம்

2011-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க அரசு, ஓமந்தூரார் வளாகத்தில் கட்டப்பட்ட புதிய தலைமைச் செயலகத்தைப் பயன்படுத்த மாட்டோம் என்று காழ்ப்புணர்ச்சி காட்டியது.

அப்போது அறிக்கைவிட்டார் கலைஞர் இப்படி: “தி.மு.க. ஆட்சியில் கட்டி, 14-8-1975 அன்று திறந்து வைக்கப்பட்ட - நாமக்கல் கவிஞர் மாளிகையில், பல இடங்களில் விரிசல் விழுந்துள்ளது என்றும், கசிவு ஏற்படுகிறது என்றும், எனவே கோட்டையில் இருந்து உடனடியாக தலைமைச் செயலகத்தை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்றும் அப்போது ஜெயலலிதா கூறினார்.

அதையெல்லாம் மனதிலே கொண்டு தி.மு.க. ஆட்சியிலே புதிய தலைமைச் செயலகம் உருவாக்கப்பட்டது. ஆனால், தற்போது ஜெயலலிதா அந்தப் புதிய தலைமைச் செயலகத்தைப் புறக்கணித்து விட்டு, பழைய தலைமைச் செயலகத்திலேயே தான் இருப்போம், நாமக்கல் கவிஞர் மாளிகையைப் புனருத்தாரணம் செய்யப் போகிறோம் என்றெல்லாம் ஆரம்பித்திருப்பது விதண்டாவாதம்; வெறுப்பினாலும், காழ்ப்புணர்ச்சியாலும் ஏற்பட்ட விளைவு; என்பதைத்தான் புரிந்து கொள்ள வேண்டும்”.

இதிலிருந்தே தெரிய வேண்டும், அ.தி.மு.க.வின் கோரிக்கைகளுக்கும் செவி சாய்க்கும் அரசியல் நாகரிகம் கலைஞரிடம் இருந்தது என்பது.


## தூய்மை இந்தியாவின் போலி சாதனை!

பா.ஜ.க. ஒன்றியத்தில் ஆட்சி அமைத்ததும் மிக பிரமாண்டமாக, தூய்மை இந்தியா (ஸ்வச் பாரத்) திட்டத்தை முன்னெடுத்தது. அதுவும் மகாத்மா காந்தி பிறந்த நாளில், அவரின் நினைவுகளைப் போற்றுவதை விட கழிப்பறை அவசியத்தைப் பேசும் நாளாக, அதை மாற்றத் தொடங்கினர்.

அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த தொடங்கிய பின்னர், கிராமப்புறங்களில் கழிப்பறைகள் கட்டுவதும் அவற்றின் பயன்பாடும் பன்மடங்கு அதிகரித்திருப்பதாக பா.ஜ.க. கொண்டாடி மகிழ்ந்தது. மாபெரும் சாதனையாகப் பேசப்பட்டது. ஆனால், சமீபத்தில் வெளிவந்த உலக வங்கியின் அறிக்கை ஒன்று, 2018-ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் ‘கழிப்பறைப் பயன்பாடு’ வெகுவாகக் குறைந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்த நிலையில் அந்த ஆய்வறிக்கை திரும்பப் பெறப்பட்டுள்ளது.

மதிப்பாய்வில் உள்ளதாகவும், ஒப்புதல் பெறாமல் வெளியிடப்பட்ட அறிக்கை என்பதால், மறுபரிசீலனை செய்ய அந்த அறிக்கையைத் திரும்பப் பெற்றதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது. ஒன்றிய அரசின் மிகைப்படுத்தப்பட்ட உண்மை வெளிச்சத்துக்கு வந்ததும், அந்த அறிக்கையைத் திரும்பப் பெற வேண்டும் என அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. உண்மைகள் எப்போதும் எட்டிக்காயாகக் கசக்கும் என்பது ‘தூய்மை இந்தியா’ குறித்த உலக வங்கி அறிக்கையிலும் வெளிப்பட்டு விட்டது.

## :.ப்ளாஷ்பேக்



### மகிழ்வு தரும் நிகழ்வு!

2006-ஆம் ஆண்டு நடைபெற இருந்த சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, ஆர்.கே.நகர் தொகுதியில் கழக நிர்வாகிகளின் ஆய்வுக் கூட்டத்திற்கு அன்றைய இளைஞர் அணி செயலாளர் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் அவர்கள் வருகை தந்து களஆய்வு நடத்தினார்.



சத்தியநாராயணன்

அந்நிகழ்வில் 22 வயது நிரம்பிய நான், இளைஞர் அணி சார்பு மன்றச் செயலாளராக கள ஆய்வில் கலந்துகொண்டு பாசமிகு தளபதி அவர்களிடம் ஆசி பெற்றேன். உடன் அன்றைய கழகத் துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.சற்குணபாண்டியன், வட சென்னை மாவட்டச் செயலாளர் அண்ணன் எல்.பலராமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இருந்தனர். இன்றளவும் இந்நிகழ்வை எண்ணி மகிழ்கிறேன்.

**-வெ.சு.சத்தியநாராயணன், தி.மு.க மாணவர் அணி அமைப்பாளர், ஆர்.கே.நகர், சென்னை வடக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அஞ்சாநெஞ்சன் அழகிரி

**1949 ஆம் ஆண்டு மார்ச் மாதம் திராவிட இயக்கத்தின் கொள்கை முரசாக இருந்த பட்டுக்கோட்டை அழகிரி இயற்கை எய்தினார். அதற்கு முன் அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு இருந்தபோது சென்னையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார் அவரது மருத்துவச் சிகிச்சைக்காக அண்ணா நிதி திரட்டினார் . தன்னை யார் கூட்டங்களுக்கு அழைத்தாலும், அழகிரி குடும்பத்திற்கு நிதி அனுப்பிவிட்டு, அந்த ரசீதை தனக்கு அனுப்பினால்தான் கூட்டங்களுக்கு ஒப்புக் கொள்வதாக பேரறிஞர் அண்ணா அறிவித்தார் சிகிச்சைக்குத் தகுந்த தொகை கிடைத்தாலும், மருத்துவம் அவரைக் கைவிட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 321




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131